# Awareness camp - SPREE 2025

**சார் மண்டல அலுவலகம் - கோயம்புத்தூர்**

**उप क्षेत्रीय कार्यालय - कोयंबत्तूर**

**SUB REGIONAL OFFICE – COIMBATORE**

**&**

**இ.எஸ்.ஐ.சி.மருத்துவமனை – திருப்பூர்**

**ई.एस.आई.सी. अस्पताल – तिरुप्पुर**

**ESIC HOSPITAL – TIRUPPUR**

**Venue**

**TIRUPPUR EXPORTERS ASSOCIATION**

**TIRUPPUR**

**25.07.2025**



कर्मचारी राज्य बीमा निगम
Employees' State Insurance Corporation
श्रम एवं रोजगार मंत्रालय, भारत सरकार
Ministry of Labour & Employment, Government of India
सत्यमेव जयते
क.रा.बी.नि.
E.S.I.C.
SPREE 2025
REGISTER
A One-Time Opportunity by
ESIC
1 July 2025 – 31 December 2025
No past dues
No inspections
No penalties
Who can register?
Unregistered Employers-Eligible Employees
→ Clean, hassle-free registration
→ Easy digital process via:
• ESIC Portal
• Shram Suvidha Portal
• MCA Portal
Secure your workforce.
Enable access to ESIC benefits.
Act now — no second chances.
For more information, visit http://www.esic.gov.in or
call the toll-free number 1800-11-2526.
@esichq
www.esic.gov.in




कर्मचारी राज्य बीमा निगम
Employees' State Insurance Corporation
श्रम एवं रोजगार मंत्रालय, भारत सरकार
Ministry of Labour & Employment, Government of India
सत्यमेव जयते
क.रा.बी.नि.
E.S.I.C.
SPREE 2025
Registration
Simple, Fast & Fully Digital
Employers can now seamlessly register their establishments under the SPREE 2025 scheme through trusted digital portals:
ESIC Portal: www.esic.gov.in
(Comprehensive registration guidance available)
Shram Suvidha Portal:
registration.shramsuvidha.gov.in/user/register
MCA Portal:
Dedicated platform for employer registration
Take the decisive step today — leverage these transparent, efficient, and 100% online channels to ensure your employees' social security and build a compliant, future-ready business.
Register now and secure your workforce with SPREE 2025!
For more information, visit http://www.esic.gov.in or
call the toll-free number 1800-11-2526.
@esichq
www.esic.gov.in

# ESIC: SPREE 2025 Awareness Camp

**5:00 p.m -7:00 p.m**

0530 – 0700 hrs, Friday, 25 July 2025: Tiruppur Exporters Association

## Programme

| | | |
|---|---|---|
| 0500 - 0530 hrs | Registration & Hi- Tea | |
| 0530 - 0535 hrs | Welcome Address & Context Setting | **Mr R K Sivasubramaniam**<br>Chairman, Membership Subcommittee, TEA |
| 0535 - 0600 hrs | Benefits of the ESIC & Presentation on SPREE 2025 Scheme | **Mr P Perumal**<br>Assistant Director,<br>SRO Coimbatore |
| 0600 - 0625 hrs | Facilities available in ESIC Hospitals, Tiruppur | **Dr C Rajasekaran**<br>CMO (NFSG),<br>ESIC Hospital, Tirupur |
| 0625 - 0630 hrs | Felicitation | |
| 0630 - 0655 hrs | Interaction moderated by Mr R K Sivasubramaniam | |
| 0655 - 0700 hrs | Vote of Thanks | **Mr M Rathinasamy**<br>Vice Chairman, Membership Subcommittee, TEA |

*****

# SPREE 2025

## முதலாளிகள் மற்றும் பணியாளர்களின் பதிவை ஊக்குவிப்பதற்கான திட்டம்

**01 ஜூலை - 31 டிசம்பர் 2025**

### SPREE 2025 என்றால் என்ன ?

**SPREE 2025** என்பது **ESIC** யில் பதிவு செய்யப்படாத தொழிற்சாலைகள் / வணிக நிறுவனங்களையும் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் / வணிக நிறுவனங்களில் இதுவரை பதிவு செய்யப்படாத தகுதியான ஊழியர்களையும், சுயமாக **ESI** திட்டத்தின் கீழ் பதிவு செய்ய, ஒருமுறை மட்டும் வழங்கப்படும் ஒரு சிறப்பு ஊக்குவிப்புத் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தின் கால அளவு : 01 ஜூலை 2025 முதல் 31 டிசம்பர் 2025 வரை.

நோக்கம் : முந்தைய காலத்திற்கான எந்தப் பங்களிப்பும், அபராதமும் சட்ட நடவடிக்கையும் இல்லாமல், ESI சட்டத்தின் கீழ் சமூக பாதுகாப்பு வரம்பை விரிவுபடுத்துவது.

### யார் பயனடைவார்கள் ?

**முதலாளிகள்**

- **ESI** சட்டம் அமலாக்கப்பட்ட பகுதிகளில், **ESI** திட்டத்தின் கீழ் இதுவரை பதிவு செய்யப்படாத 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள தொழிற்சாலைகள் அல்லது வணிக நிறுவனங்களை நடத்துபவர்கள் (கடைகள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள், சினிமா ஹால்கள், சாலை மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், செய்தித்தாள் நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் நகராட்சி / மாநகராட்சி அலுவலக ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்கள்)
- **ESI** சட்டத்தின் கீழ் அனைத்து தகுதி வாய்ந்த ஊழியர்களையும் இதுவரை பதிவு செய்யாத தொழிற்சாலைகள் / வணிக நிறுவனங்கள்.

### இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்வது எப்படி ?

இணையதளம் : https://www.esic.gov.in

**ESIC தகவு வழிகாட்டி (Portal) :**

https://portal.esic.gov.in/ESICInsurance1/ESICInsurancePortal/Employer_Employee_Registration_through_portal.pdf

**ஷ்ரம் சுவிதா தகவு (Portal) :**

https://registration.shramsuvidha.gov.in/user/register

**MCA தகவு (Portal) :** https://www.mca.gov.in/

### முதலாளிகள் / வணிக நிறுவன உரிமையாளர்களுக்கான முக்கிய நன்மைகள் :

- எளிதான மற்றும் தொந்தரவு இல்லாத பதிவு செயல்முறை
- **ESIC** இணையதளம், ஷ்ரம் சுவிதா தகவு (**Portal**) அல்லது **MCA** தகவு (**Portal**) வாயிலாக ஆன்லைனில் பதிவு செய்யலாம்.
- முந்தைய காலத்திற்கான பங்களிப்பு தொகை கோரப்படாது ; அதற்குரிய அபராதமும் விதிக்கப்படாது.
- ஆய்வின் போது முந்தைய காலத்திற்கான எந்த விதமான பதிவுகள் அல்லது ஆவணங்களைத் தாக்கல் செய்யத் தேவையில்லை.
- முந்தைய காலத்திற்கான எந்த விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாது.

### தொழிலாளிகளுக்கான நன்மைகள் :

- பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து **ESI** சட்டத்தின் கீழ் சமூக பாதுகாப்பு பலன்களைப் பெற முடியும்.
- மருத்துவ சேவைகள் - காப்பீட்டாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ சிகிச்சைகளைப் பெற முடியும்.
- நோய், மகப்பேறு மற்றும் பணிக்காலத்தில் ஏற்படும் காயம்/ மரணம் ஆகியவற்றுக்கான பணப்பலன்கள்.
- காப்பீடு செய்யப்பட்ட நபரின் வாரிசுகளுக்கு **ESIC** மருத்துவ கல்லூரிகளில் **MBBS / BDS** மருத்துவ பட்டப்படிப்பிற்கான இட ஒதுக்கீடு.

### பாதுகாப்பு அமலுக்கு வரும் தேதி :

முதலாளிகள் குறிப்பிடும் தேதியில் இருந்து **ESI** சமூக பாதுகாப்புத் திட்டம் அமலாகும்.

### இந்த அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள் :

உங்கள் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கான பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்ய மற்றும் உங்களுடைய மன அமைதிக்காக - இன்றே **ESIC**-யில் பதிவு செய்யுங்கள்! பலன் பெறுங்கள்!!

कर्मचारी राज्य बीमा निगम
Employees' State Insurance Corporation
श्रम एवं रोज़गार मंत्रालय
भारत सरकार
**Ministry of Labour & Employment**
**Government of India**

FOLLOW US ON
(Scan QR Code)


Employees State Insurance Corporation
Ministry of Labour & Employment, Government of India
Employees' State Insurance Corporation
(ESIC)
ESIC
TIRUPPUR
EXPORTERS
ASSOCIATIO
SPREE 2025
A One - Time Opportunity by
ESIC
1 JULY 2025 - 31 DEC 2025
NO PAST DUES | NO INSPECTIONS | NO PENALTIES
Who can Register ?
Unregistered Employers - Eligible Employees
www.esic.gov.in
25 July 2025 6:25 pm


5 46 30
25 July 2025 5:46 pm


25 July 2025 5:34 pm

### அரசு காப்பீடு கழகத்தில்

# தொழிலாளர் பதிவை ஊக்குவிக்க விழிப்புணர்வு அவசியம்

## உதவி இயக்குனர் பேச்சு

திருப்பூர், ஜூலை.27-

அரசு காப்பீடு கழகத்தில் தொழிலாளர்கள் பதிவை ஊக்குவிக்க விழிப்புணர்வு அவசியம் என்று காப்பீடு கழகத்தின் உதவி இயக்குனர் பெருமாள் கூறினார்.



முகாமில் தொழிலாளர் அரசு காப்பீட்டு கழக உதவி இயக்குனர் பெருமாள் பேசிய போது எடுத்த படம்.

### விழிப்புணர்வு முகாம்

தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் சார்பில், தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தில் முதலாளிகள், பணியாளர்களின் பதிவை ஊக்குவிப்பதற்கான திட்டம் (ஸ்ப்ரீ 2025) விழிப்புணர்வு முகாம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. ஏற்றுமதியாளர்கள் சங்க உறுப்பினர் துணைக்குழு தலைவர் சிவசுப்பிரமணியம் வரவேற்றார்.

தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தின் கோவை உதவி இயக்குனர் பெருமாள் பேசும்போது, 'புதிதாக தொடங்கப்பட்ட ஸ்ப்ரீ திட்டம் கடந்த ஜூலை மாதம் முதல் வருகிற டிசம்பர் மாதம் வரை அமலில் இருக்கும். தொழிற்சாலை நிறுவனங்கள், பதிவு செய்த தேதிக்கு முந்தைய காலகட்டத்துக்கான பதிவுகள் அல்லது நிலுவை தொகைகள் குறித்த பயம் வேண்டாம். கடந்த காலத்துக்கான பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. இந்த திட்டத்தின் நன்மைகள் குறித்து பலர் அறியாமல் உள்ளனர். அதனால் இதுகுறித்து விழிப்புணர்வை தொழிலாளர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

### மருத்துவப்படிப்பு

மருத்துவ பராமரிப்பு, மகப்பேறு, இயலாமை, நோய், வேலையின்மை, வேலையில் காயம், தொழிலாளியின் மரணம் மற்றும் விதவை சலுகைகள் உள்ளிட்டவற்றை பெற முடியும். 2 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருந்த கொரோனா நிவாரண திட்ட காலத்தில் சலுகை பெறாதவர்கள் இப்போது அதை பெறலாம். தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்த நபர்களின் குழந்தைகள், இ.எஸ்.ஐ.சி. மருத்துவம் மற்றும் பல் மருத்துவ கல்லூரிகளில் ஐ.பி. ஒதுக்கீட்டின் கீழ் படிக்கவும், பி.எஸ்சி. நர்சிங் இடங்களுக்கும் தகுதியுடையவர்கள்' என்றார்.

திருப்பூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி ராஜசேகரன் பேசும்போது, 'திருப்பூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. 11 துறைகள் தற்போது செயல்படுகிறது. இன்னும் பல துறைகள் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் காரணமாக வெளிநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது' என்றார்.

### 24 மணி நேர மகப்பேறு சிகிச்சை வசதி

இ.எஸ்.ஐ. மருத்துவமனை கண்காணிப்பாளர் சீனிவாசன் பேசும்போது, 'திருப்பூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் உலகத்தரம் வாய்ந்த உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளது. அதிகமான டாக்டர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். மேம்படுத்தப்பட்ட ஆய்வகங்கள் செயல்படுகிறது. 24 மணி நேரமும் மகப்பேறு சிகிச்சை பிரிவு இயங்குகிறது. அவசர சிகிச்சை பிரிவு மேம்படுத்தப்பட்டுள்ளது. வாராந்திர மருத்துவ முகாம்கள் நடக்கிறது' என்றார். திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் துணைக்குழு துணை தலைவர் ரத்தினசாமி நன்றி கூறினார்.

---

# இஎஸ்ஐ திட்ட விழிப்புணர்வு கருத்தரங்கம்




திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்க அலுவலகத்தில் இஎஸ்ஐ மருத்துவ திட்டத்தில் முதலாளிகள் மற்றும் ஊழியர்களின் பதிவை ஊக்குவிப்பதற்கான திட்டம் குறித்த கருத்துரங்கம் நடந்தது.

திருப்பூர், ஜூலை 27: ஊழியர் மாநில காப்பீட்டு கழகம் மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் இணைந்து 'முதலாளிகள் மற்றும் ஊழியர்களின் பதிவை ஊக்குவிப்பதற்கான திட்டம்' குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடத்தியது.

ஏற்றுமதியாளர் சங்கத்தின் உறுப்பினர் துணை குழு தலைவர் சிவசுப்ரமணியம் வரவேற்று பேசுகையில், "இஎஸ்ஐ பயன்கள் பற்றி ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இஎஸ்ஐ மருத்துவமனைக்கு செல்ல அவர்களை ஊக்குவிக்க வேண்டும்" என்றார். தொடர்ந்து இஎஸ்ஐ நிர்வாகத்தின் துணை பிராந்திய அலுவலக உதவி இயக்குனர் பெருமாள் பேசுகையில், "ஜூலை 2025 முதல் டிசம்பர் 2025 வரை அமலில் இருக்கும் இத்திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் நிறுவனங்கள் பதிவு செய்த தேதிக்கு முந்தைய காலகட்டத்திற்கான பதிவுகள் அல்லது நிலுவை தொகைகள் குறித்த எந்த ஆய்வு அல்லது கோரிக்கையோ இருக்காது. கடந்த காலத்திற்கான பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை" என்றார். திருப்பூர் இஎஸ்ஐ மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளர் சீனிவாசன் கூறுகையில், "இஎஸ்ஐ மருத்துவமனைகள் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருகிறது. உலகத்தரம் வாய்ந்த உபகரணங்கள் இப்போது நிறுவப்பட்டது. இஎஸ்ஐக்கு அதிகமான மருத்துவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் சிகிச்சைகள் வழங்கப்படுகிறது. வாராந்திர மருத்துவ முகாம்கள், 2ம் நிலை நோய்களுக்கான சிகிச்சை உள்ளிட்டவை வழங்கப்படுகிறது" என்றார். இந்நிகழ்வில் இஎஸ்ஐ மருத்துவமனை மருத்துவர் ராஜசேகர், திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத்தின் உறுப்பினர் துணை குழு துணை தலைவர் ரத்தினசாமி உள்பட்ட 50க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.